DINAKARAN

PAGE NO: 14 DATE: 05.07.2023

புதுவை பல்கலைக்கழகத்தில்

# புள்ளியியல் தினவிழா கொண்டாட்டம்




▶ புதுவை பல்கலைக்கழகத்தில் நடந்த புள்ளியியல் தின விழாவில் துணைவேந்தர் குர்மீத் சிங் பேசினார்.

புதுச்சேரி, ஜூலை 5: பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் புள்ளியியல் துறை சார்பில் 17வது தேசிய புள்ளியியல் தினம் கொண்டாடப்பட்டது.

இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனரகத்தின் இயக்குநர் சஜ்ஜன் சிங் ஆர் சவான் தலைமை வகித்தார்.

புள்ளியியல் துறை பேராசிரியை மற்றும் தலைவர் டாக்டர் கிருத்திகா வரவேற்றார். ராமானுஜன் கணித அறிவியல் பள்ளி புலத்தலைவர் பேராசிரியர் திருப்பதி ராவ் வாழ்த்துரை வழங்கினார்.

புள்ளியியல் துறை இணை பேராசிரியர்களான டாக்டர் சுதேஷ் மற்றும் டாக்டர் பிரபாகர நாயக் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். பல்கலை துணைவேந்தர், பேராசிரியர் குர்மீத் சிங், குடியரசு தலைவர் உரையை நிகழ்த்தி, புள்ளி விவரங்களின் அவசியம், பொருத்தம் மற்றும் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

தொடர்ந்து இந்திய புள்ளியியல் நிபுணர்களான பத்ம விபூஷன் விருது பெற்ற பேராசிரியர் மஹாலனோபிஸ்; பேராசிரியர் ராவ் ஆகியோரின் பெயரிடப்பட்ட துறையின் கருத்தரங்கு அரங்கம் மற்றும் புள்ளியியல் ஆய்வகத்தின் பெயர் பலகைகள் திறக்கப்பட்டது. என்எஸ்ஓ இணை இயக்குனர் மணீஷ் ஆனந்த் மேற்கு வங்கம், இந்திய புள்ளியியல் சேவையில் கிடைக்கும் வேலை வாய்ப்புகள் குறித்து பல நுண்ணறிவுகளை வழங்கினார்.

THE HINDU

PAGE NO: 02 DATE: 05.07.23

# Pondicherry varsity to offer B.A. B.Ed., B.Sc. B.Ed. programmes

**The Hindu Bureau**
PUDUCHERRY

The Pondicherry University will offer four-year B.A. B.Ed. and B.Sc. B.Ed. Integrated Teacher Education programmes from 2023-24 academic session.

A press note from the university said admission to these courses would be based on the National Common Entrance Test (NCET) 2023, to be conducted by the National Testing Agency. Candidates can submit applications for these programmes up to July 19 at https://ncet.samarth.ac.in/

Aspirants are advised to check the eligibility criteria for these courses on the Pondicherry University website bit.ly/44ywvdt

Candidates are also advised to visit the University and NTA website regularly for the latest updates.

DAILY THANTHI

PAGE NO: 13

DATE: 05.07.2023

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# தேசிய புள்ளியியல் தின கொண்டாட்டம்

காலாப்பட்டு, ஜூலை.5-
புதுவை காலாப்பட்டு பல்கலைக்கழகத்தின் புள்ளியியல் துறை சார்பில் 17-வது தேசிய புள்ளியியல் தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனரகத்தின் இயக்குனர் சஜ்ஜன்சிங் சவான் தலைமை தாங்கினார். புள்ளியில் துறை தலைவர் கிருத்திகா வரவேற்றார்.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் கலந்துகொண்டு, தேசத்தை கட்டியெழுப்புவதற்கும், நாட்டின் பாரம்பரியத்தைபேணுவதற்கும் புள்ளி விவரங்களின் அவசியம், பொருத்தம் மற்றும் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். தரவுகளின் சரியான பயன்பாடு மற்றும் புள்ளிவிவர பகுப்பாய்வு ஆகியவை நாட்டின் அனைத்து செயல்பாடுகளும் வளர்ச்சியடைய உதவும் என்று குறிப்பிட்டார். மேற்கு வங்காள புள்ளியியல் துறை இணை இயக்குனர் மணீஷ் ஆனந்த் புள்ளியியல் சேவையில் கிடைக்கும் வேலைவாய்ப்புகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். முன்னதாக புள்ளியியல் நிபுணர்களான மகாலனோபிஸ், சி.ஆர்.ராவ் ஆகியோர் பெயரிலான கருத்தரங்கு அரங்கம் மற்றும் புள்ளியியல் ஆய்வகத்தின் பெயர் பலகைகள் திறக்கப்பட்டன.

MAALAI MALAR

5 JULY 2023

PAGE 2

# புதுவை பல்கலையில் புள்ளியியல் தின விழா

புதுச்சேரி,ஜூலை.5—

புதுவை பல்கலைக்கழகத்தில் புள்ளியியல் துறை சார்பில் 17—வது தேசிய புள்ளியியல் தினம் கொண்டாடப்பட்டது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனர் சஜ்ஜன்சிங்சவான் தலைமை வகித்தார். துறை பேராசிரியை கிருத்திகா வரவேற்றார். பேராசிரியர் திருப்பதிராவ் வாழ்த்தி பேசினார். இணை பேராசிரியர்கள் சுதேஷ், பிரபாகர் நாயக் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங், புள்ளி விபர அவசியம் குறித்து விளக்கினார்.

பத்மவிபூஷன் விருது பெற்ற பேராசிரியர் மகாலனோபிஸ், பேராசிரியர் ராவ் ஆகியோரின் பெயரிடப்பட்ட துறையின் கருத்தரங்கு அரங்கம், புள்ளியியல் ஆய்வக பெயர் பலகைகள் திறக்கப்பட்டது. என்எஸ்ஓ இணை இயக்குனர் மணீஷ்ஆனந்த் வேலை வாய்ப்புகள் குறித்து விளக்கினார்.